செய்தி வெளியீடு எண் : 1364 நாள் : 04.09.2024

**திருநெல்வேலி மாவட்டம், பொருநை அருங்காட்சியம் அமைக்கும் பணிகள் நடைப்பெற்று வருவதை, மாண்புமிகு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவர் திரு.மு.அப்பாவு அவர்கள், மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள் ஆகியோர் களஆய்வு மேற்கொண்டனர்.**

பொதுப்பணித்துறையின் மூலம் நடைப்பெற்று வரும் அருங்காட்சியகப் பணிகளின் முன்னேற்றம், குறித்து, இன்று (04.09.2024) மாண்புமிகு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவர் திரு.மு.அப்பாவு அவர்கள், மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள் ஆகியோர் களஆய்வு மேற்கொண்டனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், திராவிட மாடல் ஆட்சி அமைந்தவுடனேயே தமிழர்களின் அடையாளமாக 4,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழர்களின் வரலாற்றை வெளிப்படுத்தும் வகையில், மதுரைக்கு அருகில் சிவகங்கை மாவட்டத்தில், கீழடியில் மேற்கொண்ட அகழாய்வில் பழந்தமிழர்களின் நாகரிகத்தின் அடையாளமாக கிடைத்தப் பொருட்களைக் கொண்டு, அருங்காட்சியகம் அமைத்து பொது மக்களின் பார்வைக்காக திறந்து வைத்தார்கள்.

அதன் தொடர்ச்சியாக, சட்டமன்றப்பேரவை விதி 110–இன்கீழ், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டார்கள். "வீரம் விளைந்த திருநெல்வேலி நகரத்தை ஒட்டி பொருநை அருங்காட்சியகம் அமைக்கப்படும்" என்று அறிவித்தார்கள்.

அதனைத் தொடர்ந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், 18.05.2023 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது.

அதில், ஆதிச்சநல்லூர், சிவகளை, கொற்கை உள்ளிட்ட பகுதிகளில் தொல்லியல்துறை மூலமாக மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகளின் மூலமாக கிடைத்த அரியப் பொருட்களை காட்சிப்படுத்த அருங்காட்சியகம் கட்டப்படும் என்று அறிவித்தார்கள்.

இதுவரையில், கொற்கையில் 812 பொருட்கள், ஆதிச்சநல்லூரில் 1,620 பொருட்கள், சிவகளையில் 185 பொருட்கள் என 2,617 பொருட்கள் அகழாய்வு மூலம் கண்டறியப்பட்டிருக்கிறது. இதைத்தவிர, 106 முதுமக்கள் தாழிகள் கண்டறியப்பட்டுள்ளது.

திட்ட மதிப்பீடு ரூ.33 கோடி மதிப்பீட்டில், 13 ஏக்கர் பரப்பளவில், 54,000 சதுர அடி கொண்ட 7 பகுதியாக கட்டப்பட்டு வருகிறது. பொருநையில் கட்டப்பட்டு வரும் இந்த அருங்காட்சியகத்தில், சிவகளைப் பகுதியில் அகழாய்வில் கண்டறியப்பட்ட அரியப் பொருட்களைக் காட்சிப்படுத்த ஓர் கட்டடமும், ஆதிச்சநல்லூர் பகுதியில் அகழாய்வில் கண்டறியப்பட்ட அரியப் பொருட்களைக் காட்சிப்படுத்த 2 கட்டடமும், கொற்கைப் பகுதியில் அகழாய்வில் கண்டறியப்பட்ட அரியப் பொருட்களைக் காட்சிப்படுத்த 2 கட்டடமும் மற்றும் சுகாதார வசதிகள் கொண்ட கட்டடங்களும் கட்டப்பட்டு வருகிறது. ஏறத்தாழ 90% சதவீதம் பணிகள் நிறைவடைந்து விட்டது. மீதமுள்ள பணிகளை விரைந்து முடித்து, இந்த நிதி ஆண்டிலேயே மக்கள் பார்வைக்கு கொண்டுவர வேண்டுமென அதிகாரிகளை அறிவுறுத்தினார்கள்.

இந்த ஆய்வின்போது, பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.மு.அப்துல் வஹாப், சங்கரன்கோயில் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஈ.ராஜா, திருநெல்வேலி மாநகராட்சி மேயர் திரு.கோ.ராமகிருஷ்ணன், துணை மேயர் திரு.கே.ஆர்.ராஜு, பொதுப்பணித்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.மங்கத்ராம் சர்மா இ.ஆ.ப., நெடுஞ்சாலைத்துறை அரசு செயலாளர் முனைவர் திரு.ஆர்.செல்வராஜ் இ.ஆ.ப., மாவட்ட ஆட்சியர் முனைவர் கா.ப.கார்த்திகேயன் இ.ஆ.ப., முதன்மைத் தலைமைப் பொறியாளர் திரு.கே.பி.சத்தியமூர்த்தி, சிறப்பு அலுவலர்(டெக்னிக்கல்) திரு.இரா.சந்திரசேகர், சிறப்புப் பணி அலுவலர் திரு.இரா.விஸ்வநாத், மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu